# மகாநாட்டின் தலைவர் வித்வான் T.K. மூர்த்தி அவர்களின் தலைமையுரை

இங்கே வருகை தந்துள்ள வித்வான்களுக்கும், ரஸிகப்பெரு மக்களுக்கும் இந்த 68ஆவது ஆண்டு இசைமாநாட்டின் தலைமைப் பொறுப்பை எனக்களித்துக் கௌரவிக்கும் மியூஸிக் அகாடமியின் தலைவர் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள், மற்றும் உறுப்பினர்களுக்கும் என் நமஸ்காரங்கள்.

1929 ஆம் ஆண்டு தொடங்கி 'ஸங்கீத கலாநிதி' எனும் விருதினை வழங்கிவரும் இம்மாபெரும் ஸங்கீத ஸ்தாபனம், சுமார் 37 ஆண்டுகளுக்குப்பின், அதாவது 1966 இல், முதன் முதலாக ஒரு லயவாத்திய விற்பன்னருக்கு - பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் அவர்களுக்கு இவ்விருதினை வழங்கியது. அதன் பின் 28 ஆண்டுகள் கழித்து, எனக்கு இந்தக் கௌரவம் அளிக்கப்படுகின்றது. ஸங்கீத வித்வத் ஸபைக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு, லயவாத்தியக் கலைஞர்களைக் கௌரவிப்பதில், இத்தனைக் கால இடைவெளி அவசியமா என்று எண்ணத் தோன்றுகிறது. 'லய வாத்திய'ங்களில் மிருதங்கம், இன்றியமையாத, தனிச்சிறப்புடைய, உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்று விளங்குவது என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. எனினும், 'லயவாத்தியம்' என்னும் போது, அது மிருதங்கம் மட்டுமல்ல, தவில், கஞ்சிரா, கடம் - இப்படி எத்தனையோ. அந்த வாத்தியங்களிலும் மேன்மையுற்று, அனுபவம் மிகுந்து விளங்கும் கலைஞர்களுக்கும் இவ்வித விருது வழங்கிக் கௌரவிக்க, மியூஸிக் அகாடமி ஆவன செய்யவேண்டும் என்பது என் வேண்டுகோள்.

திருவனந்தபுரத்துக்கு அருகாமையிலுள்ள நெய்யாற்றங்கரா என்றவூரில் பிறந்த நான், ஏழாவது வயதில், என் மூத்த ஸஹோதரர் கையாண்டுவந்த மிருதங்க வாத்தியத்தில் நாட்டங்கொண்டு அதை ஓரளவு அவரிடமே கற்றேன். அவ்வப்போது சில ஹரிகதா காலக்ஷேபங்களில் பங்குபெற்று வந்த எனக்கு, என் எட்டாம் பிராயத்தில், ஹரிகேசநல்லூர் டாக்டர் முத்தையா பாகவதர் அவர்களின் ஹரிகதைக்கு வாசிக்கும் அதிருஷ்டம் கிடைத்தது. எனது வாழ்க்கையில் கிடைக்கும் அனைத்துச் சிறப்புக்களுக்கும் அடிகோலிய நாளும் அதுதான். அன்றைய நிகழ்ச்சியைச் சுவைக்கவந்த, மிருதங்கம் மாமேதை, தஞ்சாவூர் ஸ்ரீ வைத்தியநாத அய்யர்

அவர்கள், நிகழ்ச்சி முடிவுற்றதும், ''என்னோடு நீ தஞ்சாவூருக்கு வருகிறாயா? உனக்கு மிருதங்கம் கற்பிக்கிறேன்,'' என்று கனிவோடு அழைத்தார். அன்று, அந்த லயச்சிங்கத்தின் பின்னே நடைபோட்டுத் தஞ்சைக்குச் சென்றவன்தான். கலைகளுக்கும், கலாசாரத்துக்கும் பெயர்மிகுந்த அவ்வூரே என் தாயகமாகிவிட்டது. என் குருநாதர் அவர்கள் என்னையொரு சீடனெனக் கருதாமல், தான் பெற்ற மகனெனப் பேணினார்; பயிற்றுவித்தார்.

இணையற்று விளங்கியது எங்கள் குருகுலம். ஒரே சமயத்தில் குறைந்தபட்சம் 50 அல்லது 60 சிஷ்யர்கள் இருப்பார்கள். யார், யாருடைய கைவாகுக்கேற்ப எவ்வாறு கற்பிப்பதென்று அறிந்தோரில், என் குருநாதருக்கு ஈடே கிடையாது. 'ஸங்கீத கலாநிதி,' ஸ்ரீ டி.எம். தியாகராஜன் அவர்களின் தம்பியான தம்புஸ்வாமி என்பவரும் நானும் ஒரு 'ஜோடி;' எங்கள் குருநாதருக்கு எங்களிடம் பிரியம் மிகுதி. ஸ்ரீ தியாகராஜன் அல்லது தஞ்சாவூர் ஸ்ரீ லக்ஷ்மீநாராயண பாகவதர் பாட்டுடன், எங்கள் ஸாதகம், தினந்தோறும் பலமணி நேரம் நடைபெறும். 'உருப்படிக்கு வாசித்தல்' என்ற அம்சத்தில், மிருதங்க வித்வான் ஸ்ரீ மஹாலிங்கம் பிள்ளை அவர்களும், எங்களுக்கு அவ்வப்போது வழிகாட்டுவார்.

நான் இளம்பிராயத்திலே முத்தையா பாகவதர், மழவை சுப்பராம பாகவதர், டைகர் வரதாச்சாரியார் மற்றும் பல மஹாவித்வான்களுக்கு மிருதங்கம் வாசித்து அனுபவம் பெற்றேன். ''இவருக்கு நம்மால் வாசிக்க முடியுமா?'' என்றே, ''இந்த வித்வான், சிறுவனாகிய நம்மைப் போட்டுக் கொள்வாரா?'' என்றெல்லாம் அப்போது என் நெஞ்சத்தில் அலை மோதும். அந்தக்கட்டங்களில் எல்லாம் என்னை ஊக்குவித்துத் திறமையோடு செயல்படுமாறு செய்த சூத்திரதாரி, என் குருநாதர் அவர்களே. இப்போது, இந்த 71 ஆவது பிராயத்தில் பல இளைஞர்களுக்கும் வாசித்துக் கொண்டிருக்கிறேன். இந்த இரு காலகட்டங்களுக்குமிடையே எத்தனை மாறுதல்கள்! எத்தனைப் புதுமைகள்! சிறப்பாகப் பாடும் அல்லது வாத்தியங்களை இசைக்கும் திறமை படைத்த இசைவாணர்கள் இப்போதும் இருக்கிறார்கள். புகழைச் சம்பாதிப்பது, பொருளைத் தேடுவது என்ற எண்ணம் பொதுவாக எல்லோருக்கும் இருப்பது சகஜந்தான். ஆயினும், அவ்விரண்டையும் மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட நிலைமை ஒருபுறம் உருவாகி வரும் இக்காலத்தில், எத்தனையோ புதுப் பாடல்கள், புதிய ராகங்கள், கனல் பறக்கும் லயவியவஹாரங்கள் இவற்றுக்கும் குறைவில்லையென்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும்.

ஒரு கலைஞன் என்றால் அவனுக்கு இரண்டு குருமார் உண்டென்பார்கள். பயிற்றுவிக்கும் ஆசான் ஒருவர்; மற்றொருவரின் பெயர்

'அனுபவம்.' அந்தக் காலத்தில் தஞ்சைக்கு விஜயம் செய்து, மராத்தியிலேயே ஹரிகதைகள் செய்வோரான விஷ்ணு பாவா, லட்டு பாவா போன்றவர்கள் மற்றும் நம் தமிழகத்தைச் சேர்ந்த மாங்குடி சிதம்பர பாகவதர், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர் போன்றோரின் ஹரிகதைகளில் பங்குபெற்று, அவற்றில் இடம் பெற்றுவந்த ஐந்தடி உசி, ஏழடி உசி போன்ற தாளவகைகளுக்கும், த்ருபத், அபங், கட்கா, மத்தகோகிலம் போன்ற பாடல்வகைகளுக்கும் எவ்வாறு வாசிக்கவேண்டு மெனக்கற்றேன். மஹாராஷ்டிர ஸமாஜம் ஸகா நாயகர் வீடு ஆகிய இடங்களில் வாரந்தோறும் நடைபெற்ற பஜனைகளில் கலந்துகொண்டு, அதிலுள்ள முறைகளை அறிந்தேன். 'ஸங்கீத கலாநிதி' தஞ்சாவூர் ஸ்ரீ பொன்னையா பிள்ளை வீட்டுச்சிலம்பக் கூடத்தில், என் ஓய்வு நேரங்களில், பலமுறை பயிற்சி அல்லது ஒத்திகைகளிலே வாசித்துப் பரதக்கலைக்கு மிருதங்கம் வாசிக்கும் பாங்கினைப் பயின்றேன்; மேடையிலுங்கூட நான் வாசித்ததுண்டு. குருநாதரின் இல்லத்துக்கு வரும் பெரிய வித்வான்களைப் பாடச்சொல்லி, என்னை வாசிக்கச் செய்வார் அவர். அவ்வாறு, ஒரு சமயம் மழவை சுப்பராம பாகவதர் அவர்கள் மாளவிராகத்தில், லக்ஷ்மீச தாளத்தில் பாடிய பல்லவி என் நினைவில் பசுமையாய் இருக்கிறது. என்னை அன்போடு ஊக்குவித்தவர்கள் பலர். புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை அவர்கள் என்னை மிருதங்கம் வாசிக்கச்செய்து, தாம் கஞ்சிரா வாசித்துள்ளார். முத்தையா பாகவதர், அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர், டைகர் வரதாச்சாரியார், புல்லாங்குழல் மாலி, ராஜமாணிக்கம் பிள்ளை, சௌடய்யா - இவ்வாறு அப்பட்டியல் நீளும். பலகாலம் டாக்டர் திருமதி எம்.எஸ். சுப்புலஷ்மி அவர்களுக்கு மிருதங்கக்கலைஞராக நான் இருந்ததை, இங்கு, பெருமையோடு நினைவு கூர்கிறேன். எடின்பரோ, ஐ.நா.ஸபை, ரோம் கச்சேரிகள் - இப்படியாக எனக்குப் பல சிறப்புகள், அவரோடு மேடையை நான் பகிர்ந்து கொண்ட காலகட்டத்தில் கிடைத்தன வென்பது மறக்கமுடியாத விஷயம். இசையரங்குகளில் முதன் முதலாக 'இரட்டை மிருதங்கம்' ஏன்-மூன்று மிருதங்கங்கள் பங்குறுவதை அறிமுகப்படுத்தியவர், என் குருநாதர், தஞ்சாவூர் வைத்தியநாதய்யர் அவர்களேயாவர். தம்மோடு என்னையும், தம்புஸ்வாமியையும் வாசிக்கச் செய்தவர் அவர். கல்கத்தாவில் நான் தொடர்ந்து தங்கும் நாட்களில் அம்ருத் ஹுஸேன்கான் என்பவரிடம், தபலா வாசிக்க வேண்டிய முறைகளை அறிந்தேன்; தவிர சிறிது, சிறிதாக கஞ்சிரா, கொனக்கோல் முதலியவற்றிலும் பரிச்சயம் பெற்றேன். சில கச்சேரிகளில் பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் அல்லது பழனி ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை கஞ்சிராவுடன் நான் மிருதங்கம் வாசித்ததுண்டு. இவையெல்லாம் என் இசையறிவை வளர்த்துக் கொள்ளத் துணை நின்றவை.

மிருதங்கக் கலையென்பது மிகச் சிறப்பானவொன்றாகும். மழைநீர் சொட்டுவதால் எழுந்த ஒலியைக் கேட்டு, ஸ்வாதி என்பவர் மிருதங்கத்தை

உருவாக்கினார் என்று பரதமுனியின் ''நாட்டிய சாஸ்திரம்'' கூறும். இதனைத் திருமால், நந்திகேஸ்வரர் போன்றோர் கையாண்டதாகப் புராணங்கள் தெரிவிக்கின்றன. லய வின்யாஸம் செய்வதற்காக மட்டுமே தோற்றம் பெற்ற வாத்தியமல்ல அது. முதலாவதாக, அதுவொரு பக்கவாத்தியமே என்ற நினைவு, அதனைக் கையாளும் கலைஞர்களுக்கு தேவை. பாட்டை எந்த அளவுக்கு நமது வாசிப்பினால் உயர்த்தி, அழகு செய்ய முடியுமோ, அதைச் செய்வதுதான் மிருதங்கக் கலைஞர்களின் முக்கியக் கடமை. 'பாட்டுக்கு வாசிப்பது' எனும் அம்சம் தற்காலம் குறைந்து வருவதைக் காண வருத்தமாயிருக்கிறது. மிருதங்கக்கலையில் ஈடுபடும் இளங்கலைஞர்கள், இதை மனத்தில் நன்கு பதித்து, அந்தக் கோணத்திலும் தம் கவனத்தைச் செலுத்த வேண்டுமெனக் கோருகிறேன். மிருதங்கக் கலையைப் போதிக்கும் கல்லூரிகளில், பயிற்சிக்காலத்தில் ஓராண்டினைப் ''பாட்டு அல்லது பிற இசைக்கருவி''களுக்கு வாசிப்பதில் பயிற்சியளிக்க ஒதுக்கவேண்டும். வாய்ப்பாட்டுக்கு அல்லது வாத்தியங்களுக்கு வாசிப்பது, நிரவலுக்கு அல்லது ஸ்வரப் பிரஸ்தாரத்துக்கு வாசிப்பது போன்ற பல்வேறு தனித்தன்மை கொண்ட முறைகளைக் கற்பிக்க வேண்டும். இளைஞர்களாக உள்ள கலைஞர்கள், தம்மைவிட வயதிலும், அனுபவத்திலும் மூத்தோராக உள்ளவர்களிடம் மரியாதை வைத்து நடப்பதோடு, அவர்களிடமுள்ள சிறப்பு அம்சங்களை எல்லாம் கிரஹித்துக் கொள்ள வேண்டுமென்றும் கோருகிறேன்.

என் பூர்வஜன்ம ஸுக்ருதத்தினாலும், என் குருநாதரின் அளவற்ற அருளாசிகளினாலுமே இந்த மஹோன்னதமான மிருதங்கக்கலை எனக்கு லபித்தது.

புகழ் மிக்கவர்கள் அல்லது வயதில் பெரியோர் அல்லது புருஷர்களாகவுள்ள கலைஞர்களுக்கு மட்டுமே பக்கவாத்தியம் வாசிப்பதென்ற வழக்கம் எனக்கு எப்போதுமே கிடையாது. பல விதுஷிகளால் புகழைப் பெற்றுவிட்டுப் பின்னர் விதுஷிகளுக்கு வாசிப்பதில்லையென்று நான் கூறுவதில்லை. புகழ் என்னவென்று அறியா இளையோராயினும், தகுதி இருக்குமெனில், நான் வாசிக்கத் தயங்குவதில்லை. நமக்குப் புகழ் இல்லாத காலத்தில், 'சிறுவன்தானே' என்று நம்மை யாரேனும் ஒதுக்கியிருந்தால்? என்ற உணர்வு கொண்டவன் நான்.

என் இசை வாழ்க்கையைத் தொடங்கிய நாள் முதலாக, இன்றளவிலும் என்னை ஆதரித்துவந்துள்ள வித்வான்கள், விதுஷிகள், ரஸிகர்கள், இசை நிறுவனங்கள் எல்லோருக்கும் என் நன்றியைக் கூறுகிறேன். இசைக்குப் பேராதரவு நல்கி வளர்ப்பதில், தனிப்பெரும் ஸ்தானம் வகிக்கும் நமது ஸங்கீத வித்வத் ஸபை, இம்மாநாட்டின் தலைமைப் பொறுப்பைத் தந்து, விருது வழங்கிக் கௌரவிப்பதற்கு என்

உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இம்மாநாட்டைச் செவ்வனே, சிறப்புற நடத்துவதில் உங்கள் எல்லோருடைய முழுமையான ஒத்துழைப்பையும் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னை இப்பூமியில் கொணர்ந்த என் பெற்றோர், எனக்கு முதன் முதலாக மிருதங்கத்தைப் பயிற்றுவித்த ஆசானாகிய என் தமையனார், என்னை மகனென வளர்த்து, லயமெனும் ஸாகரத்தின் கரைக்கு வழிகாட்டி, உருவாக்கி, இவ்விதப் பெருமைகளாகத் தம் நல்லாசிகளைப் பொழியும் என் குருநாதர், தஞ்சாவூர் ஸ்ரீ வைத்தியநாதய்யர் அவர்கள் ஆகியோரின் பொற்பாதகமலங்களில், சிரந்தாழ்த்தி என் இதயம் நிறைந்த நமஸ்காரங்களை அர்ப்பணித்து அமைகிறேன். நமஸ்காரம்.

❀ ❀ ❀